1974 ஏப்ரல் 3]

கோவில்பட்டியில் சர்க்கரை வழங்கல்

* 731. வினா—திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி நகரத்திற்கு மினி சூப்பர் மார்க்கெட், மில் தொழிலாளர் கூட்டுறவு பண்டக சாலைகள் மூலம் விநியோகம் செய்து வந்த சர்க்கரையில் ஒரு பகுதியை எடுத்து தலியார்கள் மூலம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) சபை முன் விவர அறிக்கை @ ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

சென்னையில் கோதுமை வழங்கல்

* 732. வினா—திரு. என். கே. பழனிசாமி: மாண்புமிகு உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் 1973 மார்ச் திங்களில் கோதுமை பற்றுக் குறைவு ஏற்பட்டதா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) 1973 அம் ஆண்டு மார்ச் திங்களில், சென்னையில் கோதுமைப் பற்றுக்குறை இல்லை. அத்திங்களில் மத்தியத் தொகுப்பிலிருந்து 15,000 டன் கோதுமை இம்மாநிலத்திற்கு வந்தது. நுகர்வோரின் வாலாயமான தேவைகளை நிறைவு செய்ய இது போதுமானதாயிருந்தது.

திரு. என். கே. பழனிசாமி: சார், இந்த கோதுமை பற்றுக்குறை இன்னும் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கிறது. சமீபத்தில் சர்க்கார் மொத்த வியாபாரத்தை கைவிட்டதுதான் இதற்கு காரணம் என்று கருதப்படுகிறது. பற்றுக்குறை தொடர்ந்து இருப்ப தால் மேலும் அதிக அளவில் கோதுமை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

@ 133-ம் பக்கத்தில் இணைப்பு V ஆக அச்சிடப்பட்டுள்ளது.